#GadgetFreeHour

மாணவர்களுக்கான தமிழ் விவாத மன்றம் 2026

பதிவு செய்ய: 15 அக்டோபர் 2026 முதல் 10 நவம்பர் 2026 வரை.

நடைபெறும் நாள்: 14 நவம்பர் 2026 (முதல் சுற்று)

யாரெல்லாம் பங்கேற்கலாம்: 9 – 12 ஆம் வகுப்பு மாணவர்கள். இது ஒவ்வொருவரின் தனித்திறன்களுக்கான போட்டி (குழுக்களுக்கு இடையிலான திறன்களை மெய்ப்பிக்கும் போட்டி அல்ல)

பரிசு, பாராட்டு:

- **முதல் பரிசு:** ரூ.3000 மதிப்புள்ள பரிசுகள், வெற்றிக்கோப்பை, சான்றிதழ். வெற்றியாளர் விவரம் பேரண்ட் சர்க்கிள் இணையதளத்தில் வெளியாகும்.
- **இரண்டாவது பரிசு:** ரூ.2000 மதிப்புள்ள பரிசுகள், பதக்கம், சான்றிதழ். வெற்றியாளர் விவரம் பேரண்ட் சர்க்கிள் இணையதளத்தில் வெளியாகும்.
- **சிறப்பான பேச்சாளர்களுக்கு:** சிறந்த 2 பேச்சாளர்களுக்கு ரூ.1000 மதிப்புள்ள பரிசுகளுடன் பதக்கமும் சான்றிதழும் வழங்கப்படும். மேலும் எமது இணையதளத்தில் அவர்களது விவரங்கள் வெளியிடப்படும்.
- போட்டியின் முடிவில் அனைவருக்கும் இணைய வழி பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

parentcircle THE DOT Learning Circle

விதிமுறைகள்:

- ஆன்லைனில் பதிவு செய்வது கட்டாயம்.
- 9, 10, 11, 12 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் பங்கேற்கலாம்.
- முன்பதிவுகள் நவம்பர் 10, 2026 அன்று இரவு 11:59 வரை ஏற்கப்படும்.
- முதல் சுற்றுப்போட்டி (தொடக்க நிலை), ஜூம் அழைப்பு வாயிலாக (Zoom) நடத்தப்படும்.
- ஒருமுறை பதிவு செய்துவிட்டால், அமைப்பாளர்களின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றிப் போட்டியாளர்களை மாற்றவோ, அவருக்கு பதிலாக மற்றொருவரை நியமிப்பதோ இயலாது.
- நிகழ்ச்சிக்கு முன்பு தொழில்நுட்ப விவரங்களைப் போட்டியாளருக்குத் தெரிவிக்க ஒரு பயிற்சி நடத்தப்படும். இதுகுறித்த தகவல்கள், அவர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். இப்பயிற்சியில் அவர்களின் சந்தேகங்கள் தீர்த்துவைக்கப்படும்.
- WSDC நடைமுறைகளின்படி (உலக பள்ளிகள் இடையிலான விவாத சாம்பியன்ஷிப் வழிகாட்டுதல்கள்) இப்போட்டி நடைபெறும்.
- கூடுதல் விவரங்களை, பதிவு செய்யும்போது பெறலாம்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

parentcircle THE DOT Learning Circle

குறிப்பு:

போட்டி தொடர்பான தேதி, நேரம் ஆகியவற்றை மாற்றியமைக்கும் சுதந்திரமும் அதிகாரமும் அமைப்பாளர்களுக்கு உண்டு. அவ்வாறு ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், அதுகுறித்த தகவல், போட்டியாளர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும்.

பதிவு செய்வது எப்படி?

படிநிலை 1: பள்ளிகள் மட்டுமே இதில் பதிவு செய்துகொள்ள முடியும். ஒவ்வொரு பள்ளியும் தனது அதிகாரப்பூர்வ மின்னஞ்சலைப் பயன்படுத்தியே பதிவு செய்துகொள்ளவேண்டும். கூடுதல் தகவல்களை www.gadgetfreehour.com என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். அதில், contests என்ற பகுதியைக் கிளிக் செய்து, அங்குள்ள Debating contest - Tamil என்ற சொல்லை க்ளிக் செய்தால் பதிவு செய்வதற்கான பக்கத்திற்கு அழைத்துச் செல்லும்.

படிநிலை 2: உங்கள் பெயர், தொடர்பு விவரங்களை உள்ளீடு செய்து, ஓ.டி.பி எண்ணைப் பெறுங்கள்.

படிநிலை 3: உங்கள் மாணவரின் விவரங்களை உள்ளிட்டு (பெயர், வகுப்பு, பள்ளி, ஊர் முதலியவற்றுடன்) பதிவு செய்துகொள்ளுங்கள். உங்கள் பள்ளியின் பெயர் பட்டியலில் இல்லை என்றால், Scroll செய்து others என்பதைத் தேர்வு செய்யுங்கள். அதன்பிறகு உங்கள் பள்ளியின் பெயர், ஊர் ஆகியவற்றை உள்ளிடுங்கள்.

படிநிலை 4: கூடுதலாக போட்டியாளர்களை சேர்க்க Add participants என்ற தேர்வைப் பயன்படுத்துங்கள். பின்னர், நீங்கள் பதிவு செய்த மின்னஞ்சல் முகவரிக்கு பதிவு உறுதிப்படுத்தல் விவரங்கள் அனுப்பப்படும். கூடுதல் தகவல்களும் மின்னஞ்சல் வாயிலாகவே அனுப்பி வைக்கப்படும்.

மேலும் தகவலுக்கு: www.gadgetfreehour.com ஐப் பார்வையிடவும் அல்லது 8754458799 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

parentcircle THE DOT Learning Circle